ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

අති විශෙෂ அதிவிசேஷமானது EXTRAORDINARY

අංක 831/17 – 1994 අගෝස්තු 12 වැනි සිකුරාදා – 1994.08.12
831/17 ஆம் இலக்கம் — 1994 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை
No. 831/17 – FRIDAY, AUGUST 12, 1994

(ආණ්ඩුවේ බලය පිට ප්‍රසිද්ධ කරන ලදී.) (அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது) (Published by Authority)

# பகுதி I : தொகுதி (I) — பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. — பீ 21/78 III.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு.

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச் சட்டம் பட்ட வகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக் கல்வி நிறுவகத் (திருத்த) கட்டளைச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் அது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றி மூன்றாம் ஆண்டு திசெம்பர் மாதம் 08 ஆந் தேதிய 796/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டதும், 1980 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 10 ஆம் தேதிய 83/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான 1980 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பட்ட வகுப்புக்கு மேற்பட்ட மருத்துவக் கல்வி நிறுவகக் கட்டளைச் சட்டமானது பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) அதன் 13 ஆம் பந்தியில், அப்பந்தியின் (ட) என்னும் உட்பந்தியின் இறுதியில் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலமும் :—

" (ண) சரும நோயியல் " ;

(2) அதன் 25 ஆம் பந்தியில், " மருத்துவக் கல்விச் சிறப்பறிவு " என்னும் வரைவிலக்கணத்தில் " மருத்துவ நிருவாகம் அத்துடன் உடல்நல விஞ்ஞானம் " என்னும் சொற்களுக்குப் பதிலாக " மருத்துவ நிருவாகம், உடல்நல விஞ்ஞானம் அத்துடன் சருமநோயியல் " என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

08 — 472